| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **357/2010** |
| **DATE** | : | **08.04.2026** |
| **பெயர்** | : | **செல்வி** |
| **பெயர்** | : | **சங்கர்** |

**வாதி தரப்பு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. 06.05.2010 அன்று பூர்த்தி செய்யப்பட்ட ஆவணத்தை பற்றி எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் எனது கணவர் இறந்ததற்கு பிறகு தெரிய வந்தது. தாவா சொத்திற்கு பக்கத்தில் எம்.ஜி. ராமகிருஷ்ண நாயுடு என்பவர் புக்கிங் அலுவலகம் வைத்திருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. எம்.ஜி. ராமகிருஷ்ண நாயுடு என்பவர் அந்த இடத்தில் பஸ் நிறுத்துவார் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது.

4. தாவா சொத்தை நீதிமன்றத்தில் இருந்து வழக்கறிஞர் ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு வடவண்டையில் கோபால் நாயுடு சந்து உள்ளது அதற்கு வடக்கில் சொத்து உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தின் அளவு சுமார் 80 அடி இருக்கும். சர்வே எண் தெரியாது. எனது கணவர் யாரிடம் இருந்து தாவா சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் கோபாலகிருஷ்ண நாயுடுவிடம் இருந்து கிரையம் வாங்கினார். கிரையம் வாங்கிய பிறகு எனது கணவர் பெயரில் பட்டா வாங்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது, எனது கணவர் தான் பார்த்து வந்தார். தாவா சொத்திற்கு குழாய் வரி மற்றும் சொத்து வரி எனது கணவர் பெயரில் தான் கட்டி வந்தோம்.

5. தாவா சொத்தில் எனது கணவருக்கு முன்பு யார் இருந்தார்கள் என்றால் முதலில் எனது மாமனாரும் பின்னர் அவரது மூத்த மகன் பன்னீர் செல்வம் என்பவரும் நடத்தி வந்தார்கள். பன்னீர் செல்வம் என்பவர் எனது கணவரின்

அண்ணன் ஆவார். பன்னீர் செல்வம் என்பவருக்கு எங்களது சொத்தில் எந்த உரிமையும் கிடையாது அவர் இறந்துவிட்டார். பன்னீர் செல்வம் என்பவருக்கு எங்களது சொத்தில் எந்த உரிமையும் இல்லாததால் தான் எங்களிடம் பாகம் எதுவும் கேட்கவில்லை என்று சொன்னால் சாட்சி எந்த பதிலும் அளிக்கவில்லை.

6. 16.07.2010 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது கணவருக்கு சொத்து எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்ற விவரம் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லாததால் தான் அந்த ஆவணத்தில் உரிமை மூலம் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வரைபடத்தில் கட்டிடங்கள் உள்ள விவரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சாட்சி எந்த பதிலும் அளிக்கவில்லை. 1994ல் கட்டிடம் கட்டினோம் என நினைக்கிறேன் வருடம் சரியாக ஞாபகமில்லை. அந்த கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது கூல்ரிங்ஸ் கடை நடத்தி வருகின்றோம்.

7. எங்களது சொத்திற்கு பட்டா, சிட்டா, அடங்கல் ஆகிய வருவாய் ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது பற்றி எனது கணவருக்கு தான் தெரியும். வாதி இடத்தில் நாங்கள் தான் அத்துமீறி கட்டிடம் கட்ட முயற்சி செய்தோம், தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN
Date: 2026.04.08 19:35:23 +0530